வசதியாக இருக்கும். இதற்கு எஸ்டிமேட் தொகை எவ்வளவு? சில காலமாக வேலை கொஞ்சம் சுணக்கமாக நடைபெறுகிறதே, இதை விரைவுபடுத்த அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தப் பாலத்திற்கு எஸ்டிமேட் தொகை ரூ. 52 லட்சம். இதைத் தரைமட்ட பாலமாக அமைக்கலாமா, அல்லது உயர்மட்ட பாலமாக அமைக்கலாமா என்று பரிசீலிக்கப்பட்டு, உயர்மட்ட பாலம் அமைக்கலாம் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. இரண்டு ஆண்டு காலத்திற்குள் முடிக்குமாறு உத்தர விடப்பட்டிருக்கிறது. இப்பொழுது வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. துரிதமாக முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஆர். கருப்பையா: இந்தப் பால வேலை நடந்துகொண்டிருக்கும் பொழுது கிணறு தோண்டுகிற சமயத்தில் இரண்டு ஐம்பொன் சிலைகள் அங்கிருந்தது கண்டுபிடிக்கப்பட்டன. அந்தச் சிலைகளை இப்பொழுது எங்கே வைத்திருக்கிறார்கள்? இது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதைப்பற்றித் தகவல் என்னிடம் இல்லை. பொன் கிடைத்தால் வைத்துக் கொள்ளலாம்.

தண்டராம்பட்டு அருகில் ஆலையாற்றின் குறுக்கேயுள்ள பாலம்

*331 வினா.—திரு. கே. சகாதேவக் கவுண்டர்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை--தாணிப்பாடி போகும் நெடுஞ்சாலையில் தண்டராம் பட்டு கிராமத்திற்கு அருகில் ஆலையாற்றின் மேல் கட்டப்பட்டுள்ள பாலத்தை புதுப்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: திருவண்ணாமலை-தாணிப்பாடி சாலையில் 34/5-வது மைலில் உள்ள பாலத்தைத் தற்போது புதுப்பிப்பதற் கான செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. கே. சகாதேவக் கவுண்டர்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, சுமார் நான்கு ஆண்டுக் காலமாக இந்தப் பாலம் பழுதடைந்துவிட்டது என்று போர்டு எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. வாகனாதிகளை நிறுத்தவேண்டும் என்று போர்டு எழுதி ஒட்டிவைக்கப்பட்டிருக்கிறது. நான்கு ஆண்டுக் காலமாக இன்றுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பாலம் நாளுக்கு நாள் அதிகமாக மோசமாகப் போய்க்கொண்டிருக்கிற காரணத்தினால், பொது மக்களுக்கு எந்தவிதமான ஆபத்தோ, விபத்தோ ஏற்படாத வகையில், இனிமேலாவது அந்தப் பாலத்தை புதுப்பிப்பதற்கு இந்த அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிற குறிப்பின்படி பாலம் நல்ல முறையில் இருப்பதாகத் தெரி விக்கப்பட்டிருக்கிறது. பாலத்தைப் புதுப்பிப்பதற்குச் செயற்குறிப்பு இல்லை. இருப்பினும் அங்கத்தினர் கருத்தை மறுபடியும் தலைமைப் பொறியாளருக்கு அனுப்பி, அறிக்கை கேட்டு, நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலைப் பகுதியில் செய்யாறு பகுதியில்தான் அதிகமாக பாலங்கள் கட்டப்படுகின்றன. மற்ற இடங்களை ஏன் கவனிக்கவில்லை என்பதை அரசு சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தேவையுள்ள, அவசியமான இடங்களில் வேலை நடக்கிறது.

Visit of Minister to Vallur Anicut

* 332 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Minister for Public Works directed action to be taken against officials during his visit to Vallur Anicut in Ponneri taluk about 30th October 1969; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) 29—10—1969 அன்று மாண்புமிகு (பொதுப்பணிகள்) அமைச்சர் வல்லூர் அணைக்கட்டிற்குச் சென்று பார்வையிட்டார். அப்போது "பலகை அடைப்புகள்" வழியே நீர் கசிந்து செல்வதைக் கண்டார். அந்தத் தவற்றுக்குப் பொறுப்பான அதிகாரி மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு (பொதுப்பணிகள்) அமைச்சர் பொன்னேரியில் உள்ள பொதுப் பணித்துறை உதவிப் பொறியாளருக்கு உத்தரவிட்டார்.

திரு. என். எஸ். வி. சித்தன்: என்ன நடவடிக்கை என்று சொல்ல முடியுமா? நடவடிக்கை நிறைவேற்றப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அந்தப் பகுதியிலே சுற்றுப் பயணம் முன்னறிவிப்பு இன்றி செய்தபோது, பார்வையிடப்பட்டது. லீகேஜ் ஆப் வாட்டர் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. விசாரணை நடந்து, அந்த சூப்ரெண்டெண் டெண்ட் தவறு செய்திருக்கிறார் என்று கண்டுபிடிக்கப்பட்டு, அவர்மீது குற்றம் சாட்டப்பட்டு, சார்ஜ் ஃப்ரேம் செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கிறது.

Building of Panchayat Union School at Tirumangalam

* 333 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Sundaradas Choultry building at Thirumangalam in which the Panchayat Union School is being run is in a state of disrepair; and

(b) if so, when it will be repaired?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) திருமங்கலம் சுந்தரதாஸ் சத்திரத்தில் நடைபெற்று வந்த ஊராட்சி ஒன்றிய பள்ளி அதற்கென கட்டப்பெற்றிருக்கும் புதிய கட்டிடத் திற்கு மாற்றப்பட்டுவிட்டது.